# ஆத்மஜோதி



குமாரபுரம்

சித்திர வேலாயுத சுவாமி கோவில்



# ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மீக மாத வெளியீடு]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

- சுத்தானந்தர்

ஜோதி 17 | குரோதி ஸ்ரீ மார்கழி மீ 1உ [15-12-64] | சுடர் 2

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | குமாரபுரக் குமரவேள் பதிகம் | 33 |
| 2 | முத்தமிழ்க் காதல் | 34 |
| 3 | குமாரபுரம் சித்திர வேலாயுத சுவாமி கோயில் | 35 |
| 4 | விளக்கேற்றிவிடு! | 38 |
| 5 | அறிவுரைகள் | 39 |
| 6 | பரோபகாரம் | 41 |
| 7 | கற்பனுவாதம் | 44 |
| 8 | அல்லமாப் பிரபுவும் கொக்கித் தேவரும் | 47 |
| 9 | மனநோய் மாற்றும் மருந்து | 50 |
| 10 | சாதகர்களின் கவனத்திற்கு | 53 |
| 11 | தற்கால உலகின் நோய்கள் | 56 |
| 12 | நல்வாழ்வு வாழும் வழி | 58 |
| 13 | அத்தனின் அருள் (தொடர்ச்சி) | 63 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள் சந்தா ரூபா 75. வருட சந்தா ரூபா 3.00

தனிப்பிரதி — சதம் 30

கௌரவ ஆசிரியர் — திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் — திரு. நா. முத்தையா

''ஆத்மஜோதி நிலையம்'' நாவலப்பிட்டி. [சிலோன்]

தொலைபேசி எண் 353


# குமாரபுரக் குமரவேள் பதிகம்

(அல்வாயூர் — மு. செல்லையா அவர்கள்)

அஞ்சுமுக நெஞ்சொடுநின் கஞ்சமலர் தஞ்சமென
அன்பர்வழி பட்டு நிற்ப
ஆறுமுகம் தந்தருளி மாறுமுகம் போக்கவரும்
அப்பனே ஆல வாயில்
வஞ்சிமா தேவிமுன் சென்றமணர் துயர்தீர்த்து
மலிசைவ ஒளிப ரப்பி
மானினேர் விழியாட்கும் மன்னர்க்கு மமுதமாய்
வந்தருளும் ஞான குருவே
செஞ்சொற் கவிக்கீர ஞற்றுப் படைகொண்டு
சேர்ந்த ஆயிரவர் சிறையைத்
தீர்த்தருளு மூர்த்தியே கார்த்திகே யாவெனது
சிறுகுறை தவிர்த்த லரிதோ
வஞ்சந் துலங்கும் மிலேச்சரா லிடியுண்டு
மங்கிய குமார புரத்தில்
மகிழ்குமர வேளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே.

பத்தியிற் பூரித்த சித்தர்முகம் போன்றுபல
பங்கயம் மலர ஆங்கே
பாட்டாளிகள் மொய்த்துமது வுண்டுசெய் யோசையாற்
பாங்கரில் தூங்கு மேதி
நித்திரை விழித்தெழுந் தேகலாற் சேற்றினெலி
நிறைவுகேட் டுத்து டித்து
நீள்வரால் தத்தியே பாய்கின்ற சுனைமல்கி
நிறைதண்ணீ ரூற்று நகரில்
சித்தரும் முத்தரும் கூடியே பண்டுபல
செய்தவமி யற்று தளியாய்த்
திகழருட் டேக்கமா யோங்கிய குமாரபுரத்
திருப்ப திக்கொரு தெய்வமே
மத்தினிற் றயிர்போல் மனமுடைந் துன்னருளை
வறியனும் வேண்டி நின்றே
மகிழ்குமர வேளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே.

# முத்தமிழ்க் காதல்

(பி. ஸ்ரீ.)

முருகக் கடவுளை முத்தமிழ் வினோதனைக் கண்ட பக்த கவிகள் சிலர்; இவர்களில் தலைசிறந்தவர் அருணகிரியார். முருகவேள் புலவருள் புலவனாக மட்டுமா தமிழ் உள்ளங்களில் தோற்றமளிக்கிறான்? தமிழருள் தமிழனாகவும் தோன்றுகிறான். 'தமிழ்க்கு நல்ல தண்டமிழ் முருகன்' என்று போற்றுகிறார்கள். தாய்மொழிக் காதல் இல்லாத தமிழர்களைத் தமிழுக்கு நல்லவர்கள் என்று சொல்ல முடியுமா? முருகனைத் தமிழில் விருப்பமுள்ளவன், தமிழ்ப்பிரியன் என்று சொன்னால் போதாது; தமிழ்ப்பித்தன் என்றே சொல்ல வேண்டும்; அப்படியே சொல்லுகிறார்கள் பக்தர்கள். அதனால்தான் அருணகிரியார் கந்தரலங்காரத்தில்

**மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்**
**வைதாரையும் அங்குவாழ வைப்போன்**

என்று தம் இஷ்ட தெய்வத்தைப் போற்றுகிறார்.

சுவாமி, உன்னைத் திட்டுகிறானே! என்று புகார் செய்துகொண்டால், முருகனுக்கும் கோபம் வருவது இயல்புதான். ஆனால், 'திட்டினான் தமிழில்' என்று சொல்லி விட்டால் வந்த கோபம் எந்த மூலையிலோ போய்ப் பதுங்கிக்கொள்ளுமாம். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழால் வைதான், சுவாமி என்று சொல்லிவிட்டாலோ பதுங்கிக்கிடந்த கோபமும் மாயமாய்ப் பறந்து போகுமாம். 'வைதார்களா' அவர்களையும் வாழ வைப்பேன்! என்று சொல்லுகிறானாம் முருகன்.

எங்கே வைதார்களோ அந்த இடத்திலேயே, எப்போது வைதார்களோ அப்போதே, அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று கோபம் எழுவது இயல்பு. ஆனால் தமிழ்ப்பித்தனாகிய முருகன் தன்னை வைத இடத்திலேயே தமிழில் வைதவர்களையும் வாழ வைக்கிறானாம். 'அங்கு' என்ற சின்னஞ் சிறு சொல் இந்த அருணகிரி வாக்கிலே செலுத்தும் ஆதிக்கத்தைத்தான் என்னென்பது?



# குமாரபுரம்
## சித்திர வேலாயுத சுவாமி கோயில்

(ஆசிரியர்)

குமாரபுரம் என்பது முல்லைத்தீவுத் துறைமுகத்திலிருந்து மாங்குளம் சந்திக்குச் செல்லும் வீதியில் நாலாவது மைலில் உள்ளது. புரம் என்னுஞ் சொல் தலைநகரைக் குறிப்பதாகும். வல்லிபுரம், குமாரபுரம் என்பன ஒரு காலத்தில் சிறந்த தலைப்பட்டினங்களாக இருந்தன என்பது சரித்திராசிரியர்களுடைய கூற்றாகும்.

மாந்தை மாநகரம் சிறந்த துறைமுகமாக இருந்த காலத்திலேயே, அதாவது விஜயன் என்பவன் இந்தியாவிலே பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே திருக்கேதீச்சரம் சிறந்த தலமாக விளங்கியது. திருக்கேதீஸ்வரத்தைப் போலவே குமாரபுரமும் அக் காலத்தில் பறங்கியரால் இடிக்கப்பட்டது. குமாரபுரத்தில் இடிந்து கிடக்கும் கட்டிடங்களையும் தூண்களையும் நோக்குமிடத்து இது பண்டைக் காலத்தில் வன்னிப் பிரதானிகளும் குடிகளும் வந்து வணங்கிய பெரிய சுப்பிரமணிய தலமாய் விளங்கியது என்பது நன்கு புலனாகும். இப் புராதன புண்ணிய தலத்தில் கோயில் கொண்டருளிய மூர்த்தியின் திருநாமம் 'சித்திர வேலாயுத சுவாமி' என்பதாகும்.

இத் திருக்கோயில் கதிர்காமம் போன்ற பெருமையுடையதென தெட்சண கயிலாய மான்மியம் கூறுகின்றது. கோயில் சிறப்பினாலேயே இடத்திற்குக் குமாரபுரம் என்னும் பெயர் வந்தது. மூர்த்தி மிக மிக விசேடமானது. மூர்த்தி விசேடத்தினாலேயே திருக்கோயில் சிறப்பான பெயருடன் விளங்கியது. இந்த மூர்த்திக்கு நிகரான மூர்த்தி இலங்கையில் வேறு எங்கும் இல்லை என்பது பெரியோருடைய அபிப்பிராயமாகும். இந்தியாவிலே கூட ஒன்று இரண்டு மாத்திரம்தான் உண்டு.

இத் தலத்தை அந்நிய மதத்தினர் இடித்தழிக்கப்போகின்றனர் என்பதை முருகப் பெருமானருளால் மேற்படி தலத்திலுள்ள அந்தணர்களும் சைவ அன்பர்களும் அறிந்த

னர். பெருமானுடையதிருஉருவின்சிற்பநுட்பம், தொன்மை, அருள்திறம் முதலியவற்றைச் சிந்தித்து இம் மூர்த்தியை அன்னிய மதத்தினர் கையில் அகப்பட விடக் கூடாதென ஒருங்கு யோசித்துத் துணிந்தனர். அவர்கள் ஆலோசனையின்படி ஒரு கட்டுமரத்தில் மூர்த்தியை எழுந்தருளச்செய்தனர். இரவோடிரவாக இரகசியமாக, கந்தவனக்கடவை என இக் காலத்தில் வழங்கும் பொலிகண்டிக் கடற்கரையில் இறக்கினர். அக் கடற்கரைக்கு அணித்தாகவே அந்நிய அரசினர் கண்ணுக்குப் புலப்படா வண்ணம் ஒரு சிறு கோயில் அமைத்து அக் கோயிலில் இரகசியமாக வைத்துப் பூசித்து வரலாயினர். பொலிகண்டி என வழங்கிய இந் நெய்தல் நிலக் கிராமம் சித்திர வேலாயுத சுவாமி கோயில் கொண்ட காலந் தொடக்கம் கந்தவனம் எனவும் கந்தவனக் கடவை எனவும் வழங்கலாயிற்று.

குமாரபுரத்தில் பரிவார மூர்த்தியாக இருந்த பிள்ளையார் இப்பொழுது முல்லைத்தீவுக்கு அணித்தாக உள்ள கரையாம் முள்ளிவாய்க்காலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு குமார கணபதி என்னும் திருநாமத்துடன் வணங்கப்பட்டு வருகின்றார்.

சித்திரவேலாயுதமூர்த்தியின் விசேடத்தினால் கந்தவனநாதர் கோயில் நித்திய நைமித்திகங்களோடு நூற்றுக் கணக்கான வருடங்களாகச் சிறப்போடு விளங்கியது. ஒரு நாள் பூசகரின் கவலையீனத்தினால் மூர்த்தியின் திருக்கரமொன்றில் ஊறு ஒன்று ஏற்பட்டுவிட்டது. ஊறு ஏற்பட்ட மூர்த்தியை வைத்து வணங்குதல் சரியல்ல என்ற முடிவுக்கு வந்தனர் சிலர். அதனால் கடலில் கொண்டு சென்று மூழ்க விடுவதாக யோசித்தனர். பலர் கடலில் மூழ்கவிட விரும்பாதாராய் இன்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்னர் திருக்கோயிலின் உள் வீதியில் வடக்குப் புறமாக வன்னிமரத்தின் கீழ் ஒரு சிறு கோயில் அமைத்து ஊறு ஏற்பட்ட மூர்த்தியை அக் கோயிலில் தாபித்து நித்திய பூசை நடக்கச் செய்தனர்.

சித்திரவேலாயுத மூர்த்தியை ஒத்த சண்முகமூர்த்தி ஒன்றை மூலத்தானத்தில் பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திகங்கள் குறைவற நடைபெற்று வருகின்றன. இன்றும் அன்பர்கள்சித்திரவேலாயுத சுவாமியைஅச்சிறிய திருக்கோயிலில் அம்மைமார்களுடன் தரிசனம் செய்து வருகின்றார்கள்.



குமாரபுரத்திலுள்ள மூர்த்தி அகற்றப்பட்ட பின் கோயிலும் இடித்தழிக்கப்பட்டது. அங்குள்ள சைவ மக்கள் உளம் நொந்து வருந்தினர். அழிந்து கிடக்கும் திருக்கோயிலுக்கு அருகிலே பற்றை மறைவில் சிறு கோவில் அமைத்து சித்திர வேலாயுதப் பெருமான் ஞாபகார்த்தமாக ஒரு வேலைத் தாபித்து இரகசியமாகப் பூசித்து வந்தார்கள்.

குமாரபுரத்தில் 1817ஆம் ஆண்டில் 42 குடும்பங்களும் 1839ஆம் ஆண்டில் 48 குடும்பங்களும் 1881ஆம் ஆண்டில் 4 குடும்பங்களும் வசித்து வந்தனர். 1891ஆம் ஆண்டில் ஒருவருமே வசிக்கவில்லை என வன்னிக் கைநூல் கூறுகின்றது. ஆகவே சேவலும் மயிலும் சைவ அன்பர்களும் நடமாடிய குமாரபுரம் காட்டுக் காய்ச்சலும், கரடி வெம்புலிகளும், நச்சரவமும் வாழும் கானகமாக மந்தியுமறியா மரம் நிறை அடுக்கமாக மாறியது.

இப்பொழுது கட்டப்பட்டிருக்கும் கோயிலே ஜோதியின் முகப்பை அலங்கரிக்கின்றது. இப்பொழுது கட்டப்பட்டிருக்கும் கோயிலிலே வாசற்படியில் வைத்துக் கட்டப்பட்டிருக்கும் கருங்கல் பழைய கோயிலிலிருந்து எடுக்கப்பெற்ற கல்லாகும். இது மகாமண்டப வாசற்படியாக வைக்கப்பட்டிருக்கின்றது. கதவு நிலையில் ஒரு சோடி பாம்பு உலகமாகிய உருண்டையை நாக்கை நீட்டிக் கொத்தும் பாவனையில் அழகிய சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு வன்னிக் காடுகளில் சோழர் காலத்து லிங்கங்கள் பல மறைந்து கிடக்கின்றது என்பதற்கு ஐயமில்லை. மக்களுடைய தெய்வீக உணர்ச்சி கூடக்கூட மறைந்த லிங்கங்களும் தோற்றமாகி அருள் புரிந்து கொண்டேயிருக்கும்.

அவ்வாலயம் இருந்த இடத்தையும் அதைச் சூழ்ந்திருக்கும் நிலத்தையும் புத்தூர் சிவஸ்ரீ நா. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் அரசினரிடம் விலைக்கு வாங்கிப் புதுப்பிக்க முயன்றார்கள். இப்போது இவரது புதல்வர் சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் அத்திருத் தொண்டைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றார்கள். பரமசாமிக் குருக்கள் அவர்கள் முல்லைத்தீவு உண்ணாப்புலவு என்னுமிடத்திலிருந்து அழகிய சிவலிங்கம் ஒன்றை எடுத்து வந்து தாபித்துப் பூஜை செய்து வருகின்றார்கள்.

# விளக்கேற்றி விடு!

(சி. பொன்னுத்தம்பி)

ஆற்றல் அனைத்தும் அளித்துவிடு—நெஞ்சில்
ஆணவப் பேயை ஒழித்துவிடு!
போற்றுங் குணங்கள் நிறைத்துவிடு—நெஞ்சில்
புன்மைக் குணத்தை மறைத்துவிடு!
சோற்றுப் பொதியினைப் போலுலகில்—எனைச்
சோம்பி மடிந்திட வையாது, உனக்
கேற்ற பணிகள் எவையேனும்—புரிந்
தின்புறச் செய்க இறையருளே!

நெஞ்சைத் தெளிவு படுத்திவிடு!—சிறு
நீச நினைவை முடித்துவிடு!
வஞ்ச இருளினை ஓட்டிவிடு, — என்றன்
வாழ்வில் நிறைவிளக் கேற்றிவிடு! அருட்
செஞ்சொற் கவிதை அளித்துவிடு—நெஞ்சில்
தெய்வக் கனலை எழுப்பிவிடு! இந்தப்
பிஞ்சுக் குழந்தை களிப்புறவே-ஞானப்
பேரின்பத் தேனைப் பொழிந்துவிடு!

நல்லவரோ டெனை ஒன்றவிடு—கொடும்
நச்சுக் குணங்களைக் கொன்றுவிடு!
பொல்லா அகந்தைகள் போக்கிவிடு-நெஞ்சில்
பூரண ஞானத்தை ஊக்கிவிடு!
அல்லல், துயரில் உழற்றாதே—இந்த
அவல உலகில் சுழற்றாதே!
கொல்வதெனில் என்னைக் கொன்றுவிடு—அன்றேல்
குழந்தையேன் உன்அன்பில் கூடவிடு!

என்னைக் கவியாய இயக்கிவிடு,—உன
தின்பப் புகழை இசைக்கவிடு!
வண்ணக் கவிதை மலர்மாலை-உன்றன்
மார்பினில் சூடி மகிழவிடு!
சின்னத்தனத்தின் குறும்பினிலே-யான்
செய்த பிழைகள் பொறுத்துவிடு!
உன்னைத் தவிர உலகினிலே—எனக்
குற்றதுணைபிறி தொன்றிலையே!



# அ றி வு ரை க ள்

(ஸ்ரீலஸ்ரீ கண்ணையா யோகி ஆத்மயோக ஞான சபா சென்னை)

1. ஸ்தூல, சூக்ஷ்மப் பிரபஞ்சப் பொருள்கள் தோன்றி, இயங்கி, மறைந்து கொண்டிருப்பதற்கு ஆதாரமாயிருக்கும் உணர்வுச் சக்தி கடவுள்.

2. கடவுள் அரூபி; ஆனால் எந்த உருவிலும் அவர் ஸ்தூல, சூக்ஷ்ம உலகங்களில் வெளிப்படுவார் அருவ, அருவுருவ, உருவ நிலைகளில் அவர் இருக்கிறார்.

3. கடவுள் ஒன்றே; அவரின் குண, கர்ம, சுபாவங்களைக் கொண்டு அவரை எண்ணற்ற வடிவிலும், பெயரிலும் வழிபடலாம்; தெய்வங்களில் வேற்றுமை காண்பது அறியாமை.

4. கடவுள் நிலைசக்தி, செயல்சக்தி என இருவகைகளில் இருக்கிறார்; நிலைசக்தியில் அவரை ஆணாகவும், செயல் சக்தியில் பெண்ணாகவும் கருதப்படுகிறது; உயிர்களைப் பரிணாமத்தில் இயக்கி, விளையாடிக் கொண்டிருக்கும் இயற்கை இறைவனின் செயல் சக்தியாகையால் தேவி வழிபாடு சிறந்ததாகும்.

5. உயிர்கள் தம் உண்மை நிலையில் இறைவனைப் போன்றவைகள்; ஆயினும் மலங்களின் தொடர்பால் அவை சிற்றறிவுடையவையாக இருந்து வருகின்றன; இறையருளால் உண்மையை உணர்ந்துய்யும்.

6. சாதி, குலம், கோத்திரம், உறவு, உயர்வு, தாழ்வு, முதலியவைகள் பௌதிக உலகில், பௌதிக உடலுக்கும் மன நிலைக்கும் தான் பொருந்துமன்றி ஆன்மாவுக்குப் பொருந்தா, அனைத்திலும் ஆன்மாவைக் காண முயல்பவன் இவைகளால் வேற்றுமை கருதமாட்டான்.

7. யோக சாதனைதான் இறைவனையடையும் நேர்பாதை; ஆனால் முற்பிறவிகளின் பயனால் நேராக யோகத்தைப் பயில முடியாதவர்கள் உபாசனையின் மூலமாகத்தான் அதை மேற்கொள்ள முடியும்.

8. தியானம் கலவாத பக்தி, பூஜை, உபாசனைகள் பயனளிக்கா; உபாசனை, யோகம் முதலியவைகளை எக்குலத்தவரும் செய்து பயன்பெற முடியும்; ஆனால் தகுந்தவொரு குருமூலமாக அதற்கான அதிகார தீக்ஷை பெற்றுச் செய்தால்தான் பலன் கிடைக்கும்.

9. உபாசகர், யோகி, சாதகர் முதலியவர்களை வேடங்களால் அறிய முடியாது; இறையருள் பெற உடல் வேடங்களோ, காட்டு வாசமோ தேவையில்லை; இல்லறத்திலிருந்தே எந்த சித்தியையும் அடைய முடியும்; ரிஷிகளும், முனிவர்களும் இல்லறத்தில்தான் இருந்தனர்.

10. மண்ணுலகில் இருக்கும் போது பெறாத எந்த சித்தியையும் இறந்தபின் பெறமுடியாது; மண்ணுலகத்தில் இருக்கும் போதே முக்திவரை தெய்வ அருளைப் பெற்றாக வேண்டும்.

11. யோக சாதனைகளில் தோன்றும் சித்திகளை உலகில் உபயோகித்துப் பேரும், புகழும், செல்வமும் தேட முயல்பவன் பேரின்பம் பெறமாட்டான், மறைவில் பாபத்தையே சேமிப்பான்; சித்திகளின் ஆற்றலை மேலும் தன் உயர்வுக்காகவே பயன் படுத்த வேண்டும்.

12. சாதுக்கள், பெரியோர்கள் போன்று தெய்வ அருள் பெற்றவர்களின் உதவி கொண்டு தம் குறைகளைப் போக்கிக் கொள்ள முயல்வது சரியல்ல; ஒவ்வொருவரும் தாமே நேராக இறையருளைப் பெற்று, குறைகளைப் போக்கிக் கொள்ள முயல வேண்டும். வழிகாட்டிகளாகத் தான் பெரியோர்களைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

---

**ஊரிலான் குணங் குறியிலான் செயலினான் உரைக்கும்**
**பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்**
**சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு**
**நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்.**

— கந்தபுராணம்.



# பரோபகாரம்!

(ஸ்ரீமதி. சிவானந்த சந்தானம்மையார்—மதுரை)

''தினகரன்'' ஒளி பொருந்திய செங்கதிர்களை வீசி உயிர்வகைகளை வாழச் செய்கிறான். நட்சத்திரங்களும் அங்ஙனமே பிறருக்கு வழிகாட்டுகின்றன. நதியானது மலைமீதிருந்து பாய்ந்து வந்து கல்லென்றும், முள்ளென்றும் பாராமலும், வெப்பமென்றோ, குளிரென்றோ கருதாமலும் இரவும் பகலும் இடையறாது ஓடிக் கொண்டே வயல்கள், தோட்டங்கள், வனங்கள் முதலியவைகளுக்கும், சகல ஜீவராசிகளுக்கும் தண்ணீரை வழங்கி உயிர் கொடுக்கிறது. அது போன்று மரம், செடி, கொடிகள் பிறருக்கெனவே மலர்கள், காய்கள், பழங்கள் இவைகளைத் தாங்கிக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறே பிரகிருதி அன்னை தனது சிருஷ்டியின் உயிர்கள் அனைத்திற்கும் சிறந்த காற்று, நன்னீர், தானியம், காய்கள், கனிகள் இன்னும் தேவையான எல்லாவற்றையும் அளிக்கின்றனள்.

ஆனால்?..... ...

ஜீவப் பிராணிகளாகிய நமது தன்மையோ எனில் தூய்மையான காற்றை உட்கொண்டு அதை அசுத்தமானதாக வெளி விடும்படியாகவும், சுத்தமான நீரைப் பருகிவிட்டு பிறகு அதைக் கழிவு நீராகக் கழிக்கும்படியாகவும் இயற்கைத் தாய் அளிக்கும் செழுமையான காய்கறி, கனி, தானியங்களை உணவாக ஏற்று அதை அசுத்தமாம் கழிவுப் பொருளாய்க் கழிக்கும்படியாகவும் அமைந்துள்ளது. தான் சிருஷ்டித்த தனது குழந்தைகள் தன்னைப் பார்த்துப் பணிபுரியும் தொண்டில் தன்னைப் பின்பற்ற வேண்டுமென விரும்பும் பிரபஞ்சமாகிய ''தாய்'' சிறிதும் களைப்புறாது, முணு முணுக்காது நாம் வெளிவிடும் அசுத்தமான காற்றை சுத்தம் செய்து நாம் சுவாசிப்பதற்கு உகந்த தூய காற்றாக்குகிறாள். கழிவு நீரை வெப்பத்தால் நீராவி ஆக்கிப் பிறகு அதை வானில் கருமேகங்களாகச் செய்து பரிசுத்தமான மழைநீராய் நமக்கு இயற்கைத் தாய் வழங்குகிறாள்.

பூமித்தாய் ஜீவர்கள் வெளிப்படுத்தும் கழிவுகளையெல்லாம் பொறுமையுடன் ஏற்று அவைகளையே தான்ய மணிகளாகவும் வண்ண மலர்களாகவும் புஷ்டிதரும் காய்கனிகளாகவும் நமக்குத் தந்து நமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கண்ணும் கருத்துமாயிருக்கிறாள். இயற்கை அன்னையின் கருணைதான் என்னே!! என்னே!! சொல்லவும் முடியுமோ! அத்தகைய இயற்கைத் தாயின் திருவடிகளுக்கு போற்றி! போற்றி!

பூதவுடல் தாங்கிய சான்றோர்களும் தமக்கென வாழாது பிறருக்கெனவே வாழ்கின்றனர். அல்லும் பகலும் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் பரோபகாரத்திற்கே அர்ப்பணிக்கின்றனர். பிறருக்குத் தொண்டு புரிவது சேவை. சித்தசுத்தி உண்டுபண்ணுவதும் சேவை. அகங்காரத்தை அகற்றுவதும் சேவை. எவ்வுயிரையும் தன்னுயிராய்ப் பார்க்கும்படி செய்வது சேவையாகும். பரபோதத்தை வளர்ப்பது சேவையாகிறது. பணிவிடை செய்கிற இடத்து வள்ளல் ஆகிறான். அவனுடைய வாழ்வு அப்பொழுது பெருவாழ்வாக மாறுகிறது. இதைத்தான் தாயுமானவர் தமது பாடலில் தெரிவிக்கிறார்.

**அன்பர்பணி செய்ய எனை**
**ஆளாக்கி விட்டு விட்டால்**
**இன்பநிலை தானே வந்து**
**எய்தும் பராபரமே.** *(தாயுமானவர்)*

மக்களுக்குச் செய்கின்ற தொண்டு சிறந்தது. ஆதலால்தான் ''மக்கட் தொண்டே மாதவன் தொண்டு'' என்று பெரியோர்கள் பறைசாற்றியுள்ளனர். அனைவரையும் ஒன்றுபோல் கருத வேண்டும். ''இமயஜோதி ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் கூற்றுக்கிணங்க அனைவரிடத்திலும் ஆண்டவனையே பார்க்க வேண்டும். அந்த நிலைமை நம் ஒவ்வொருவருக்கும் வருமேயானால் இந்நாட்டில் போர்மூளாது. மக்கள் ஒருவருக்கொருவர் சண்டை செய்ய மாட்டார்கள். இது நாட்டிற்கே நன்மை பயக்கும். பிறருக்குத் தொண்டு செய்தலையே தனது கடமையாக்க வேண்டும். ஆதலால்தான் கீதையில் தெரிவித்துள்ளது.

**''கர்மண் யேவாதி காரஸ்தே மாபலேஷு கதாரண''**



அதாவது பணி செய்வதே நினது கடமை, பலனில் பற்று வைக்காதே என்பதாக அர்ஜுனனிடம், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா திருவாய் மலர்ந்தருள்கிறார்.

தேசத்திற்கு, சமூகத்திற்கு, வறியோர்களுக்கு, நோயுற்றோர்களுக்கு, சிறிதளவு ஆற்றிய பணியும் வீண்போவது கிடையாது. அதனால் சித்த சுத்தி ஏற்பட்டு உள்ளம் ஆத்ம ஞானத்திற்குத் தகுதியுடையதாக ஆகிறது. நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் யக்ஞமாக செயல்புரிதல் வேண்டும். நன் முயற்சியுடன் சுயநலமற்ற முறையில் தொண்டாற்ற வேண்டும். இதைத்தான் திருநாவுக்கரசர் தெரிவிக்கிறார்.

**நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன் கடன் அடியேனையுந் தாங்குதல்**
**என்கடன் பணிசெய்து கிடப்பதே.**

(திருநாவுக்கரசர்)

இதையேதான் ''ஜகத் குரு'' ''இமயஜோதி'' ''சமய ஜோதி'' ''அருள் வள்ளலார்'' ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் ஆறு பெயர்களில் தெரிவித்துள்ளார்கள். Serve, Love, Give, Purify, Meditate, Realize, சுவாமிகள் தன்னலமற்ற நிஷ்காம்யமான தொண்டிற்குத்தான் முதலிடம் கொடுத்தருளினார்.

ஆகையால் மெய்யன்பர்களே! நாமும் குருவருளையும், திருவருளையும் துணையாகக் கொண்டு பரந்த மனத்துடனும், தூய்மையான இதயத்துடனும், உண்மையான தொண்டு மனப் பான்மையுடன் பரோபகாரம் செய்து எம்பெருமானுக்குப் பணிபுரிந்து இம்மையிலேயே உய்வோமாக.

ஜெய் சிவானந்த்! **ஜெய் சிவானந்த்!!**
*ஓம் தத் சத்! ஓம் தத் சத்!! ஓம் தத் சத்!!!*

---

**ஞானந்தான் உருவாகிய நாயகன் இயல்பை**
**யானும் நீயுமாய் இசைத்தும் என்றால் அஃதெளிதோ**
**மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதும்**
**தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை.**

— கந்தபுராணம்.

# கற்பனா வாதம்

(வ. சின்னத்தம்பி)

உலகம் தோன்றிய காலம் தொட்டு, இன்று வரை, உலகம் இருக்கும் வரை பகல், இரவு உண்டாவது போல இந்தக் கற்பனாவாதம் என்ற ஆணவ இருள் மனித இனத்தில் சிலருக்கு ஒரு நோயாக இருக்கிறது. அமைதியாக வாழும் பல மனிதர்களை இந்தக் கற்பனா வாதக் கூச்சலிடுபவர்கள் கெடுத்து விடுவதுண்டு. ''வாதமிடு பரசமயம் யாவுக்கும் மிகஅரிய மகிமைபெறு, பெரிய பொருளே''என்று தாயுமானார் காட்டிய உண்மையில் இந்த விதமான வாதம் செய்பவர்கள்தான் கற்பனா வாதிகள். நில்லாதனவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாண்மை கடை என்ற வள்ளுவர் வாக்கை நிரூபிக்க மனித குலத்தின் கடையாய பிறவியில் வந்து புல்லறிவை ஆணவத்துடன் பரப்புவோர்களே கற்பனாவாதிகள்.

வேதத்திற் கேள்வியில்லாதது. போதத்திற் காணவொண்ணாதது. வீசத்திற் தூரமில்லாதது. கதியாளர் வீதித்துத் தேடரிதானது'' என்ற அருணகிரிநாதர் வாக்கில் வருகின்ற கதியாளரே இந்தக் கற்பனா வாதிகள்.

இந்தக் கற்பனா வாதிகள் நாஸ்தீகம் என்ற அறிவை ஆணவம் என்ற வெளிச்சத்தில் கற்றுக்கொண்டு மனித குலத்தில் புனிதமான மக்களைக் கூடத் தம் பக்கம் திருப்ப முனைவார்கள். இவர்கள் தெய்வீக சக்தி அனைத்தையும் நிராகரிப்பவர்கள். பழி பாவம் என்ற உண்மைகளை மறுப்பவர்கள். ஆத்மீக சிந்தையாளரை அலட்சியம் செய்பவர்கள். கோயில்வழிபாடுசெய்பவர்களைக்கோழைகள்என்றுகூறுபவர்கள். விரதமிருப்பவர்களை, புராண இதிகாசம் படிப்பவர்களை, தோத்திரப் பாடல்கள் ஓதுபவர்களைக் குருட்டு நம்பிக்கை யுள்ளவர்கள் எனக் கூறுவார்கள். ஆலயங்களில் திருவிழாச் செய்பவர்களை, விழாவுக்குச் செல்பவர்களை வேலையற்ற வீணர் கூட்டம் என்று நகையாடுவார்கள்.

இந்தக் கற்பனாவாதிகளின் வரட்டுக் கூச்சலுக்கு அற்புத சக்தி மிக்க மனித இனம் அடிபணியப் போவதில்லை. புண்ணியம்ஆம்பாவம்போம்என்றஒளவைமொழியை உணர்ந்தவர்கள், புன் னெறி யதனிற் செல்லும், போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து வாழ்பவர்கள்,



''ஆக்கையாற் பயனென் அரன்கோயில் வலம்வந்து பூக்கையாலட்டிப் போற்றி யென்னாத இவ்வாக்கையால் பயன் என்''? எனக் கற்றதனாலாய பயன் என் கொல்? வாலறிவன் நற்றாள் தொழா ரெனின் என்ற கருத்தறிந்து வாழ்பவர்கள். இவர்கள் வையத்து வாழ்வாங்கு வாழ்பவர்கள். இவர்களை வானுறையும் தெய்வத்துக்குச் சமமாகக் கருதக் கூடியவர்களைப் பார்த்து ஏளனம் புரிய ஒரு பகுதியினர் வாழ்வார்களானால்! அவர்கள் மயிலின் ஆட்டத்தைப் பரிகசிக்கும் வான் கோழிக் கூட்டத்தினராவார். கண்டதெல்லாம் பழுப்பு என்ற காமாலை நோய் பிடித்தவரை ஒப்ப வாழ்பவர்கள். பாலிற்கும் கள்ளிற்கும் பேதம் காணாதவர், பட்டப் பகலை இரவெனக் கூறிடும் பாதக இனம். இவ்வித பரிதாப மனித குலத்தைக் கண்டு சில மகான்கள் தம் உள்ளம் வருந்திக் கூறும் பாடல்களை உணர்க! முதலாவதாகவாக்குக்குஅருணகிரி என்ற சிறந்த தத்துவ ஞானி கூறிய சில பாடல்வரிகளில் எத்தனைவிதமான பாதகர்களைக்காட்டுகின்றார்.

1. தோழமை செய்து உசலம் செய் குண்டர்கள் — உசலம்—தீங்கு.

2. ஓதிய நன்றி மறந்த குண்டர்கள் — குரு செய்த நன்றி மறத்தல்.

3. சூழ் விரதங்கள் கடிந்த குண்டர்கள்—காப்பது விரதம்.

4. பெரியாரைத் தூஷண நிந்தை பகர்ந்த குண்டர்கள்—சிவ தூஷணம்.

5. ஈவது கண்டு தகைந்த குண்டர்கள்—தகைதல் தடுத்தல், ஈவது விலக்கேல்.

6. சூழுற வெண்பதொழிந்த குண்டர்கள் — சூழவேண்டிய நல்லோர் நட்பை ஒழித்தவர்கள்.

7. தொலையாமல் வாழ நினைந்து வருந்து குண்டர்கள்— சதா காலமும் வாழ ஆசைப்படல்.

8. நீதியறங்கள் சிதைந்த குண்டர்கள் — நீதிக்கும் தர்மத்திற்கும் மாறாக வாழ்பவர்.

9. மான அகந்தை மிகுந்த குண்டர்கள் — நானெனும் ஆணவத்தால் அநீதி செய்தல்.

10. வலையாலே மாயையில் நின்று வருந்து குண்டர்கள்—ஆசை வலையால் காமுகனாதல்.

11. தேவர்கள் சொம்கள் கவர்ந்த குண்டர்கள்—சொம் -சொத்து, தேவ சொத்தை அபகரித்தல்.

12. வாதை நமன் தன் வருந்திடும் குழி விழுவாரே—வாதையைத் தருகின்ற யமதர்மன் சபையில் மேற்கூறிய பாபிகள் விசாரணை செய்து தண்டனை பெறுவர்.

(குறிப்பு) இத் திருப்புகழ் கோடைநகர் என்ற தலத்தில் பாடிய முன்னரைவாசிப் பாடலாகும். இன்னோரிடத்தில் ''ஈசர் விஷ்ணுவை சேவை செய்வோர் தமை இகழ்வோர்கள், ஏக சித்த தியானமில்லாதவர், மோக முற்றிடு போகிர்த மூறினர்''—ஈனர் இத்தனை பேர்களும் ஏழ்நரகுழல்வாரே'' என்று முன்பாடலில் காட்டியது போல இதில் சில பாபிகளை ஈனர் என்றார். இந்தக் கற்பனா வாதிகளைக்குண்டர்கள்என்றும்ஈனர்களென்றும்அருணகிரிநாதர்கூறினார்.

அடுத்தபடியாக வாதவூரர் கனிவில் என்ற பொன்மொழிக்கு ஒப்ப, மணிவாசகர் கூறும் திருவாசகத்தில் இந்தப் பாபிகளை நினைந்து பரிதாபப்பட்டு வருந்துகின்றார்.

**வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே! வல்வினைப்பட்டு**
(ஒரு காலத்திலும் வாழமாட்டாய்)
**ஆழ்கின்றாய், ஆழாமற் காப்போனை ஏத்தாதே**
(துன்பவினை உனை ஏமாற்றும்)
**சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கிறேன்! பலகாலும்**
(கேடு நீங்க இறைவனை நினை)
**வீழ்கின்றாய்நீ அவலக் கடலாய வெள்ளத்தே**
(அவலக் கடலில் ஆழாதே)

இத் திருவாசகத்தில் நமது மனதில் கருவாக வேண்டிய பல உண்மைகள் தெளிவாகின்றன.

கடைசியாகக் கல்லும் கனியும் அருட்பா மூலம் இராமலிங்க அடிகள் கூறும் ஒரு பாடல் மூலம் வையத்து வாழ்வாங்கு வாழத் தெரியாத மனித இனத்தை எப்படிக் கூறுகின்றார்.

எந்தை நினைவாழ்த்தாத பேயர் வாழ் கூழுக்கும்,
ஏக்கற் றிருக்கும் வெறும்வாய்
எங்கள் பெருமானை வணங்காத மூடர்தலை,
இகழ் விற கெடுக்கும் தலை
கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்,
கலநீர் சொரிந்தழு கண்



# அல்லமாப்பிரபுவும், கொக்கித்தேவரும்

(குரு. ஆ. கந்தசாமி ஐயா, திருச்சி.)

பிரபுதேவரின் வழிப்பயணத்திலே அவர் ஓர் அழகிய நந்தவனத்தைக் கண்டார். தேவ உலகிலுங் கிடைத்தற்கு அரிய பூக்கள் எல்லாம் இங்கு இருக்கின்றன என்றே சொல்லலாம். அதுமட்டுமா அந்நந்தவனத்தினுட் சென்றால் பகல் இரவு என்ற வித்தியாசமே தெரியாது. பல்லாயிரக் கணக்காகப் பூத்திருக்கும் மலர்களில் தேன் நிறைந்திருப்பதைப் பருகுவதற்காக வண்டுகள் இங்கும் அங்குமாகப் பரந்து ரீங்காரம் செய்து கொண்டிருப்பதானது வீணையின் நாதம் போன்று செவிகளின் மூலம் உள்ளத்தில் ஆனந்தத்தைத்தந்து கொண்டிருக்கும்.

இவ்வகைச் சிறப்பினைப் பெற்ற நந்தவனத்தின் தலைவன் கொக்கித்தேவர் ஆவர். அரியயனுங்காணற்கரியஅல்லமாப்பிரபுதேவர் கொக்கித்தேவரின் வினையினைத்தடுத்துஞானோபதேசம் செய்ய வேண்டி அவரருகில் சென்று அருள் நோக்கோடு சரணம் என்றனர். நந்தவனத்தின் தலைவனாகிய கொக்கித்தேவரும் பதில் வணக்கம் செய்து உமது, பெயர், தொழில் யாதெனத் தெரிந்து கொள்ள விரும்பும் எனக்கு

---

முன்பக்கத் தொடர்ச்சி

**கடவுள் நின்புகழ்தன்னைக் கேளாத வீணர்செவி,**
**கைத்திழவு கேட்கும் செவி**
**பந்தமற நினைஎண்ணாப்** பாவிகள் **தம்நெஞ்சம்,**
**பகீரென நடுங்கு நெஞ்சம்**
**பரம நின்திரு முன்னர் குவியாத வஞ்சர்கை,**
**பலியேற்க நீள் கொடுங்கை**
**கந்தமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்,**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி சண்முகச் சைவமணி,**
**சண்முகத் தெய்வ மணியே.**

உலகினில் ஆணவ இருட் கூட்டம் அகல!
அருள் நெறித் திருக் கூட்டம் வளர்க!

விளக்கமாகக் கூறுவீராக! என்றதும், ஞான ஒளி விளக்காகிய நம் அல்லமன், நான் பக்தர்கள் வீடுதோறும் சென்று பக்தியெனும் பிச்சையினை உண்டு ஒருதொழிலுமற்று சும்மாயிருப்பவன். என் பெயரோ அல்லமன் என்பர். உன் பெயரோ? என்றார். என் பெயர் கொக்கித்தேவன். ஆனால் நீர் குரு. லிங்கம், சங்கமர்களுக்காகத்தான் உடம்பை உழைக்காமல் வீண் காலம் போக்குவது உணவு மாத்திரம் அருந்தும் நடைப்பிண மென்பர். கிடைத்தற்கரிதாகிய மனித உடம்பைப் பெற்றும் செய்தற்கரிய தருமங்கள் செய்து துன்பம் மிகுந்த பிறவியினின்றும் உய்யும்வகை தெரியாதவன் உடம்பு எதற்குச் சமமென்றால் பொன் பாத்திரத்தில் ஊற்றி வைக்கும் பாலை மண்வெடிப்பில் கொட்டினதை ஒக்கும் என்றுஅறிஞர் கூறுவர். மேலும் நமது சரீரம் மின்னலைப் போன்று தோன்றி அழியுந் தன்மையுடையது. ஆகவே நல்வினைக்கீடாகிய புண்ணிய கருமங்களைச் செய்து அதனால் அழியாத உடம்பைப் பெற்று இன்புற்றிருப்பதை விடுத்து உழைத்தால் உடம்பு இழைத்து விடுமென்று சும்மாயிருக்கின்ற உன்னையொத்த சோம்பேறியாகிய மருளன் இவ்வுலகில் யாரும் இல்லையையா என்று இடித்துக்கூற, நம் ஐயனாகிய பிரபுதேவர் கைதட்டிச் சிரித்து புண்ணிய பலத்திற்குக் காரணமாகிய தர்மங்களென்னும் நல்வினைகள் பல செய்து பேரின்பப் பேற்றை அடையலாம் என்றால் மும்மலங்களில் ஒன்றாகிய வருத்தத்தைக் கொடுக்கின்ற ஆணவ மலத்தினாலும் பேரின்பப் பேறடைய முடியும் அல்லவா? என்ற கேள்வியைப் போட்டு மேலும் சொல்கின்றார். அவரவர் செய்கின்ற புண்ணியவசத்தினால் பேரின்பப் பேறாகிய மோட்சத்தை அடையமுடியும் என்றனை. மாமிசத்தாலாகிய உடலானது அழியாமுன் யாவனொருவன் பரமபதத்தை (விதேககைவல்யமென்னும் ஜீவன்முக்த நிலையை) அடைவனேயானால் மாயையினின்றும் நீங்கியவனாவான்.

மனத்தை ஐம்பொறிகளின் வாயிலாகச் செலுத்துவோமாகில் அப்பொறிகளினால் நுகரக்கூடிய இன்பத்தை மட்டுமே பெறமுடியும். மனத்தை உள்முகமாகச் செலுத்தி அசைவற்ற தன்மையில் நிறுத்திப் பழகினால் சிவமே தோன்றும். அந்நிலை கிட்டும்போதுதான் பிறப்பு இறப்பற்ற முக்தியை அடையமுடியும் என்று உபதேசித்தார். அவ்வரிய கருத்துக்களைக் கொக்கித்தேவர் கேட்டும் சந்தேகம் நீங்கப் பெறவில்லை என்பதை உணர்ந்த பிரபுதேவர்சிவயோகியின்மூலம் உபதேசிக்க



எண்ணி, ஓர் இடத்தைக் காட்டி இவ்விடத்தை மண்வெட்டியினால் தோண்டும் என்றார். இசையுடன் பாடும் வண்டுகள் நிறைந்த நந்தவனத்தையுடையகொக்கித்தேவர் அவர்வார்த்தைக்கிணங்கி பூமியை வெட்டியவுடன் பொற்கலசம் ஒன்று தோன்றியது. மேலும் வெட்டிப் பார்க்க வறியவனுக்குக் கிடைத்த பொருள்போலப் பத்மாசனத்துடன் வடிவம் சிறிதும் அசைவின்றி இளைத்த சரீரத்துடன் அங்கையில் அமைந்த லிங்கத்தின்மேல் கண் திறந்துந் திறவாததிருஷ்டியைவைத்து தன்வசமற்றுசரணத்தலத்தில்அமர்ந்திருக்கும்அநிமிடயோகியைக் கண்டனர்.

அல்லமாப் பிரபு கொக்கித்தேவருக்கு அனுபவநிலையைக் கரதலாகமலம்போலச் சிவயோகியைக்காரணமாக வைத்துக் காட்டி உபதேசிக்கின்றார். உன்போன்று புறக்கருமங்களைச் செய்யாது எதைச் செய்தால் பிறவியற்ற நிலையாகிய சிவஐக்யம் பெறமுடியுமோ, அதைச் செய்து கொண்டிருக்கும் சிவயோகியைப் பார் என்று தெரிவித்துக் கொண்டிருக்கும் பொழுதே அநிமிடயோகியின் கரதலத்திருந்தஇட்டலிங்கமானது நமது பிரபுதேவரின் கைக்கு வந்தது. சிவயோகியின் சீவகலையும் உடன் வந்து இட்டலிங்கத்தோடு அல்லமதேவரில் ஐக்யமாகியது.

இவையனைத்தையும் கண்ணாரக் கண்ட கொக்கித்தேவர் அடியற்ற மரம்போலப் பிரபுதேவரின் பாதங்களில் விழுந்து வணங்கி ஐயனே என்னையுந் தங்கள் சீடனாக ஏற்று தீட்சை செய்தருளல் வேண்டுமென்று வேண்ட ஐயன் திருக்கரங்களால் எடுத்தணைத்து தனது பாதத்தைக் கொக்கித்தேவரின் சிரசின் மேல்வைத்து ஞானோபதேசம் செய்தருளினார். தீட்சைபெற்றதும் ஆனந்தபரவசத்தில் மூழ்கிஎன்னை ஆட்கொண்டதுபோல உலகிலுள்ள பக்குவிகளாகிய அடியார்களுக்கு உபதேசித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்த வண்ணம் சிவத்தியானத்திலமர்ந்து விட்டார். பிரபு தேவர் யாத்திரையைத் தொடங்கலானார்.

‘‘அகமதை நோக்கிற் ஜெக மென லேது’’

---

ஓகையாற் றிரைமுன் னாளில் உழக்குமா வினையும் வாட்டும்
ஏகவெவ் வரையின் எல்லை பிடித்திடும் இமையோர்போற்றத்
தோகைமேல் உலவும் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை.

— செவ்வந்திப் புராணம்

# மனநோய் மாற்றும் மருந்து

— புலவர். சி. விசாலாட்சி —

**''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''**

என, மனநோயினால் அலைப்புண்டு அழியும் மக்களையெல்லாம் அன்புடனழைத்து, எல்லாம் வல்ல இறைவனிடம் ஆற்றுப் படுத்துகின்றார் தெய்வப் புலமை வாய்ந்த வள்ளுவப் பெருமான்.

எல்லா நோய்களிலும் கொடியது மனநோய். உடலில் ஏற்படும் நோய் உடலை மட்டுமே வருத்தும். உடல் நோய் மாறும் தன்மை கொண்டது. அதனை மாற்ற வழியுண்டு. மனநோயை மருந்து கொண்டு மாற்ற முடியாது. மாறாத கொடிய நோயையும் கூட அதிக பொருளைச் செலவழித்து மாற்றி விடலாம். அத்தன்மையான பொருள் மனநோயின் முன் தூசாகி விடுகின்றது. எனவே பல்லாயிரக் கணக்கான பொருள் செலவழித்தும் காணமுடியாத மனஒய்வை பக்திப் பாடல்கள் தருமென்றால் அது மிகையாகாது.

அலைந்து அல்லற்படும் மனதை, ஒய்வைத்தேடித் தவிக்கும் உள்ளத்தை, பக்திப் பாடல்கள் மெதுவாக அழைத்து அன்புடன் பரமனிடம் அனுப்புகின்றன. எத்தகைய ஆற்றலையும் செய்யும் பக்திப் பாடல், ஐம்புலன்களாற்றாக்கப்பட்டு நசுக்குண்டு மிகக்களைத்துள்ள மக்களை யெல்லாம் அழைத்து, அவர்களின் உள்ளத்தை வளம்படுத்துகின்றது. ஒன்றுபடாத மனதை ஒருமைப் படுத்தி என்றும் மீளாத தெவிட்டாத சச்சிதானந்தத் தேனையும் அளிக்கும் வன்மைவாய்ந்த பக்திப் பாடலின் பெருமை, அதன் அருமை படித்தவர்க்கேயன்றி மற்றவர்க்கு உணர்த்துதல் அரிது. பக்திக் கடலுள் ஆழ்ந்த சமயகுரவரும், ஆழ்வார்களும், பக்தியினால் உள்ளத்தை உருக்கிக் கனிவாக்கும் பாடல்களை தமிழ் மக்களுக்கென்றே அளித்தனர்.

இளமையும் எழிலும் மிக்க இனிய தமிழானது ஏற்றத்துடனும் தோற்றத்துடனும் வாழ்ந்து வந்த காலத்தில், கருமேகம்போன்ற சமணசமயம் தோன்றியது. பூரண சந்திரனை



மறைக்கும் பாம்புபோன்று எம் சைவசமயத்தைக் கொடிய நாகம் போன்ற சமணம் மறைத்தது. சைவம் குன்றுவதைக் கண்ட தமிழ் அன்னைவிட்ட கண்ணீர் ஆறாகப் பெருகத் தொடங்கியது. இதனைக் கண்ட இறைவனின் பக்தர்கள், துன்பக் கடலுள் ஆழ்ந்தனர். இவற்றை நீக்க தமிழ்நாட்டில் இசைப் பாடல்களாகிய பக்திப் பாடல்கள் மலிந்தன. இப் பாடல்களால் ஊறப்பட்ட ஞானிகள் சித்தர்கள் பெரியோர்கள் தாம் செல்லும் உயர்ந்த வழிக்குப் பின்வருவோரையும் அழைக்க விரும்பி வழிகாட்டியாகப் பல பொன்மொழிகள், நீதிநூல்கள் முதலியன செய்து வைத்தனர். மலங்களால் மறைப்புண்டு வருந்தி வாடும் மக்கள் அவற்றைப் பின்பற்றுதலே தலையாய கடமையாகும்.

**''இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லைகண்டேனே''**

என மணிவாசகப் பெருமான் தான் கண்ட மருந்தை மிகத் தெளிவாக கண்டபத்திற் கூறியுள்ளார். கண்டபத்து முழுவதிலும் மனநோயையும் அதனைமாற்றும் மருந்தையும் அழகுபடுத்தி அன்பர்க்கு அரிய விருந்தாக அளித்துள்ளார். எனவே குற்றமும் குறையும் மலிந்த மனிதன் தன் குறைகளை இறைவனிடம் முறையிட்டு அழுவதிலும், இறைவனின் நிறைவுகளைக் கூறுவதினால் மனிதனின் மனம் வாக்குக் காயம் ஆகிய மூன்றும் பண்படுகின்றன. கடைப்பட்டவனையும் கடையேற்றும் பக்திப் பாடல்களை படித்துவரும்மனிதன் மண்ணில் மாத்திரமன்று, மூவுலகிலும் தெய்வமாக்கப் படுகின்றான். பக்திப் பாடலினால் அன்பும் அறனும் வானளாவ ஓங்கி வளருகின்றது. அதனால் ஆற்றுதற்கரிய மனநோய் வேருடன் சரிந்து விடுகின்றது.

''நடராஜர் பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு''

''அம்பலப் பட்டே அருட் பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு''

எனப் பக்திப் பாடலின் பெருமையைக் கூறிய வள்ளலார், அப்பக்திப் பாடலால் வரும் பயனை,

''இனித்துயர் படமாட்டேன் விட்டேனோ
என் குரு மேலாணை யிட்டேனோ''

''இனிப்பாடு படமாட்டேன் விட்டேனோ
என்னப்பன் மேலாணை யிட்டேனோ''

என வைராக்கியம் உண்டாகும்படி கூறியுள்ளார். பக்திப் பாடல் பாடுவதுடன் செயலையும் பக்தி வசமாக்குவது மனநோய்க்குச் சாலச் சிறந்ததாகும். ''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை'' என வருமடிகளே அதற்குச் சான்றாகும். பக்திவலையில் அகப்பட்டு இறை தொண்டு புரிந்த அப்பர், இறைவனுக்கே ஐம்புலனும் ஐம்பொறியும் தொண்டு செய்தல் வேண்டும். அதனாற் கிடைக்கும் இன்பமே இன்பம் எனக் கூறுமுகமாகத் திருவங்க மாலை பாடியுள்ளார்.

ஓம் சக்திசக்தி சக்தியென்று சொல்லு—கெட்ட
சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு
சக்தி சக்தி சக்தியென்று சொல்லி—அவள்
சந்நிதியிலே தொழுது நில்லு

''சக்திதனை யேயிழந்து விட்டால்—இங்கு
சாவினையும் நோவினையும் உண்ணு''

''சக்திசில சோதனைகள் செய்தால்—அவள்
தண்ணரு ளென்றே மனது தேறு''

எனப் பாட்டுக் கொரு புலவனாகிய பாரதிநோயும், மருந்தும் கூறிமக்களுக்கு நல்லதோர்வழிகாட்டியாகஅமைந்துள்ளான். இப்படியே செம்மொழியாகிய தமிழ்மொழியிற் காணப்படும் நூல்கள் முழுவதும் பக்திச் சுவை மிளிர்ந்து மணந்து காணப்படுகின்றன. அவற்றைப் பின்பற்றுதலே மனிதப்பிறவி யெடுத்த எம் முழுக்கடமையாகும்.



# சாதகர்களின் கவனத்திற்கு

முகம்மதுகாசிம்–மதார்நாச்சியா.

கற்பனையிலே வாழுகின்ற மனம் கவலையினால் கலங்கிடும் கதம்பம். சிந்தனையின் குழப்பத்திலே தடுமாறும் மனம் மயக்கத்திலே தத்தளிக்கும் மந்த நிலை.

மானிட வாழ்க்கை ஒரு மர்மம், புரியாத புதிர், விளங்க முடியாத வினோதம், ஆனால் இதயம் ஆத்மீக சக்தியில் தொடர்பு கொண்டதும் மனித ஜீவியத்தின் ரகசியத்தை நன்கு விளங்க முடியும்.

சாதனையில் கவனம் செலுத்தி உனது மனோசக்திகளை ஒன்றுபடுத்தி அசைவற்று இரு. வாழ்வில் நிகழும் எல்லாவித மாறுதல்களிலும் மயங்காது தெளிவாக இரு.

ஆத்மாவிலிருந்தே மனம் தோன்றியது. பின் பஞ்சபூதங்களின் சேர்க்கையினால் இவ்வுலகம் இருப்பது போல் காட்சியளிக்கிறது. மனதை ஆத்மாவிடம் லயமாக்குவதே சாதனை.

உனது உள்ளத்தில் குழப்பங்கள் இருந்தால்தான் சூழ்நிலையினாலும் பாதிக்கப்படுவாய். அகம் அமைதியாக இருந்தால் அவனி முழுவதும் சாந்தமாகத் தவழும்.

மனதை சதா நோக்குவதே அதை சம்பூர்ணமாக விளங்குவதற்குச் சிறந்த மார்க்கம். அதுவே எல்லாத் தவங்களிலும் கடினமானது.

மனது நிமிஷந்தோறும் மாறிடும் சுபாவமுள்ளது. ஆகவே மனதை நம்பி வாழும் மனிதர்கள் முடிவில் ஏக்கத்தையும் ஏமாற்றத்தையுமே அனுபவிக்க நேரிடும்.

மனதின் தன்மைகளை முற்றிலும் விளங்காதவரை தியானத்தில் வெற்றி காண முடியாது.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மனம் குழம்பாது—சாந்தமாக தெளிந்த அறிவோடு இருக்கப் பழகிக் கொள். அதுவே விவேகம்.

இன்ப துன்ப உணர்ச்சிகளில் சிக்காது சித்தத்தை உணர் வெளியில் உயர்த்துவதே விவேகம்.

நிலையான இன்பம் உயர்வான தியானத்திலே உணரப்படும்மேலான அனுபவம். அதை வார்த்தைகளால் விவரிக்க

முடியாது. ஆனால் நேரடியாக மனங் கடந்த மௌனநிலையில் சந்திக்க முடியும். அதை அடைவதே சாதனை.

சிந்தனையின் ஓட்டத்தைத் தடுத்தால்தான் சிந்தனையற்றதோர் தெய்வீக நிலைக்கு உயர முடியும்.

சாந்தியிலே ஓய்வுகாண, அமைதியிலே ஆனந்தம் காண, இனிய வாழ்வு மலர்ந்திட அகம் அசையாது அகண்டத்திலே ஒடுங்க வேண்டும்.

நமது வாழ்க்கையில் ஏற்படுகின்ற எல்லாவித நிகழ்ச்சிகளுக்கும் நாமே பொறுப்பாளியாகும். செயல்களை மதிப்பிடும் அளவில் நோக்கினால் அவைகள் நன்மையாகவோ தீமையாகவோ இருக்கலாம். ஆனால் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்தால் எல்லாவித அனுபவங்களும் ''நம்மை நாமே'' நன்கு விளங்குவதற்கே ஏற்படுகின்றது என்பது புலனாகும்.

நினைவுடன் சம்பந்தப்படும் ஆத்மா நித்தியத்தைக் காண முடியாது.

கடுமையாகப் பாடுபட்டு இச்சைகளைக் கட்டுப்படுத்தியவனே கொடுமை நிறைந்த ஆசைகளின் பிணியிலிருந்து நீங்க முடியும்.

இன்பத்தை எந்த மனம் நுகர்கின்றதோ அதுவேதான் துன்பத்தையும் சுவைக்கின்றது.

மாண்பு மிக்கதோர் மகத்தான வாழ்க்கை மனம் ஒடுங்கிய வேலையிலேதான் ஆரம்பமாகிறது. அதுவே உண்மையான சாதனை.

முரட்டுத்தனமான உணர்ச்சியின் கொந்தளிப்பால் உருவாக்கப்பட்ட மனிதனின் மனம், வாழ்க்கையில் ஏற்படும் இடையூறுகளைக் கொண்டே பண்பாடும் பக்குவமும் அடைகிறது.

நமது மனம் எப்பொழுதும் ஒரு ஆழமான ஆசை உணர்ச்சியில் உழன்று கொண்டே இருக்கிறது மனதை முற்றிலும் அறிந்ததும் சஞ்சல நினைவுகள் மறைந்து உண்மையான விடுதலையின் இன்பத்தை அறியலாம்.

ஆசைகள் யாவும் வெறும் பிரதிபலிப்பே. அறிவு அமைதியாக வளர்வதற்கு உணர்ச்சி கலந்த கீழான எழுச்சிகள் பெரும் தடைகளாகும்.

மனதும் உடலும் இயங்கும்போது பௌதீக உலகம் புலனாகிறது. கனவு காண்கின்ற நிலையிலே மனது சூட்சும உலகில் வாழ்கிறது,



மனது ஒடுங்கிய வேளையிலே காரண உலகில் ஓய்வு பெறுகிறது. ஆனால் துரியம் எல்லா நிலைகளிலும் பாதிக்காது சாட்சி மயமாக இருக்கிறது. அதில் அறிவோடு உணர்வோடு ஒன்றுபடுவதே தியானத்தின் உச்சநிலை.

ஆத்மார்த்த அந்தரங்க ஞானமானது அறிவின் துணையினால் அடையும் கலையல்ல. ஆனால் அருளின் தெளிவால் உணரும் அனுபவமாகும்.

அந்தரங்கத்தில் பொய்மைகளின் கட்டுக் கோப்புகளிலிருந்து விடுபட்டு, உலக ஆசைகளின் கவர்ச்சிப் பிடிகளை உடைத்தெறிந்து சதா தியான நிலையிலேயே விடுதலைபெறுவதே உண்மையான சந்நியாசமாகும்.

தியானத்தின் அடிப்படையிலேதான் தெய்வீக சக்தியுடன் தொடர்பு கொள்ள முடியும். யதார்த்தத்தை விளங்குவதற்கு மனப் பரிசுத்தமும், ஆத்மீக ஒழுக்கமும் அவசியம் தேவை. அந்தப் பண்பாடு இல்லாவிட்டால் அகண்டவஸ்துவின் அகமிய ரகசியத்தை விளங்க முடியாது.

பற்றற்ற துறவு நிலையே ஆத்மீக மலர்ச்சிக்கும் தெய்வீக வாழ்வின் முன்னேற்றத்திற்கும் முதற்படி.

எவனுடைய இதயமானது இறைவனின் இடமாகிவிடுகிறதோ அவனே உண்மையான பக்தன். அவன் வாழ்வெனும் பூங்காவில் வனப்புடன் வழிநடந்து செல்லும் புனித யாத்திரிகன்.

— தொடரும்

## உலக பேனா நண்பர் கழகம்

உலகெங்கும் பரந்து நிற்கும் தமிழ் மக்களிடையே தொடர்பை உருவாக்கி, மொழிமூலம் ஐக்கியத்தையும், பண்பாட்டையும் நிலைநாட்டி வெளிநாட்டுத் தொடர்பைப் பலப்படுத்த நல்லதொரு வாய்ப்பு.

ஆறு ஆண்டுகள் நிறைவு பெற்ற ''உலக பேனா நண்பர் கழகம்'' தனது பணியை விரிவு படுத்து முகமாகத் தமிழ் மக்களின் ஆதரவை எதிர்பார்க்கிறது. மேலதிக விபரங்களுக்குப் பத்துச்சத அஞ்சல் தலைப்புடன், விண்ணப்பதாரர் முகவரி எழுதப்பட்ட அஞ்சலுறையைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

''உலக பேனா நண்பர் கழகம்''
''கலைச்செல்வம் நூலகம்''
43. நுவரெலியா வழி;
வெளிமடை.

# தற்கால உலகின் நோய்கள்

— சுவாமி சிவானந்தர் —

1. தற்கால சமூகத்தில் உண்மையான அன்பு இல்லை. பிறரை அடக்கியாளவும் உடமைகொள்ளவும் உலகில் போராட்டம் நடந்து வருகிறது.

2. அவாவாலும், பேராசையாலும், சுயநலத்தாலும் ஆதிக்கம் செலுத்தப்பட்ட இந்த நவீன உலகம் அன்பு நெறியின் குரலைக் கேட்க மறுக்கிறது.

3. உலகத்திலுள்ள தீய சக்திகளெல்லாம் சுய நலம் என்ற உருவைப் பெற்றிருக்கின்றன. சுய நலம், சிற்றின்பம், பேராசை, ''தான்'' என்ற எண்ணம், ஆகியவையே மனித குலத்தின் நோய்களுக்கு மூலகாரணம்.

4. உங்கள் வாழ்நாட்களைப் பகைமையிலும், சச்சரவிலும் செலவழிக்காதீர்கள். சாலத்தைவீணுக்காதீர்கள். வீண் செலவு செய்யாதீர்கள். உயிர்க்கொலை செய்யாதீர்கள். எல்லாரிடத்திலும் நேசபாவத்துடன் தலைவணங்கி நடப்பீர்களாக.

5. அதிகாரம் உலகப் பிரச்சினைகளைத் தீர்த்து விடாது. ஆனால் சேவா மனப்பான்மையும், தோழமை உணர்ச்சியும், அன்பும், தியாகமும் நிறைந்த மனோநிலையும் உலகப் பிரச்சினைகளைத் தீர்த்துவிடும்.

6. உலகத்தில் ஒற்றுமை, இணக்கம், சாந்தம் ஆகிய இவற்றை நிலைநிறுத்த வேண்டுமானால், மொழி, இனம் வழக்கம், மதம் பற்றிய விரோதம் ஒழிய வேண்டும்.

7. எதேச்சாதிகாரமும், சுதந்திரமும் வாழ்க்கையில் எத்துறையிலும் ஒருங்கே நிலைத்திருத்தல் இயலாது. அவை ஒன்றையொன்று வெறுக்கின்றன. ஏனென்றால் அவற்றின் இயல்புகளே அத்தகையது.



8. ஒரு நாட்டினம் தோன்றுவதும் உருவாக்கப்படுவதும் கட்டுப்பாட்டினால்தான். ஒரு நாட்டினம் அமைப்பதில் கட்டுப்பாடு முதன்மை இடம் பெறுகிறது.

9. மனிதன் அதிக சுறுசுறுப்பாய் இருக்கிறான். ஆயினும் உண்மையில் ஒன்றுமே செய்வதில்லை; அல்லது தாழ்ந்த நிலையில் தன் சவக் குழியைத் தோண்டிக் கொண்டே இருக்கிறான்.

---

# கதிர்காமத்தில் தெய்வநெறிக்கழகம்

ஆத்மீகப்பணியாற்றும் நோக்கத்தோடு கதிர்காமத்தில் தெய்வநெறிக் கழகம் ஒன்று உருவாகியுள்ளது.

**போஷகர்கள்:—**

1. யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜீ அவர்கள்
2. சச்சிதானந்த சிவானந்த மாதாஜீ அவர்கள்

**தலைவர்:—** ஓம்கார சைதன்ய சுவாமிகள்

**உபதலைவர்கள்:—** 1. சாது நம்பியாரூரன் அவர்கள்
2. டாக்டர் S. வல்லிபுரம் அவர்கள்

**காரியதரிசிகள்:—** 1. V. குலசேகரம் (I. E.) அவர்கள்
2. சுவாமி ஜோதிர்மயானந்தஜீ அவர்கள்

**தனாதிகாரி:—** N. குருசாமி (I. E.) அவர்கள்

**நிர்வாகசபை அங்கத்தவர்கள்:—**

1. சாது சண்முகவடிவேல் அவர்கள், 2. சுவாமி புருஷோத்தமானந்தஜீ அவர்கள், 3. வேலாயுதசுவாமிகள், 4. வேல்சுவாமிகள், 5, பலீல்பாவா அவர்கள், 6. மகாதேவசுவாமிகள், 7. மு. சின்னத்துரை அவர்கள், 8. G. கணபதிப்பிள்ளை அவர்கள், 9. N. சர்வானந்தன் அவர்கள், 10. A. K. மில்டன் டி. சில்வா அவர்கள்.

**கணக்குப் பரிசோதகர்:—** இ. சபாரத்தினம் S.H.S. அவர்கள்.

# நல் வாழ்வு வாழும் வழி

(அகில பாரதீய தர்மபீட ஸமுதாய சங்க வெளியீடு எண் 8)

உலகில் தோத்திரங்கள், சாஸ்திரங்கள், வேதாந்தம், சித்தாந்தம் இவைகள் எல்லாம் மக்கள் நன்றாக வாழும் வழியைத்தான் சொல்லுகின்றன. வேதாந்தமும் சைவ சித்தாந்தமும் ஒரே உண்மையைத்தான் விளக்குகின்றன. பொருள் கொள்ளுகிறவர்கள் பலவிதமாகக் கொள்வது இயல்பு.

வேதாந்த சித்தாந்த சமரசத்தைத் தாயுமானவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிதுகாண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
ஏது வருமோ அறிகிலேன்
கண்ணகனிலத்து நானுள்ள பொழுதே அருட்
ககன வட்டத்தினின்று
காலூன்றி நின்று பொழியானந்த முகிலொடு
கலந்து மதியவசமுறவே
பண்ணுவது நன்மை இந்நிலை பதியுமட்டுமே
பதியாதிருந்த தேகப்
பவுரி குலையாமலே கௌரிகுண்டலியாயி
பண்ணவிதனருளினாலே
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
வேண்டுவேன் உனது அடிமைநான்
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே

என்று தாயுமானவர் அருளியுள்ளார். திருஞானசம்பந்தப் பெருமான்,

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.



என்று பாடி அருளியிருக்கிறார். இம் மண்ணுலகில் நல் வாழ்வு வாழ வேண்டுமானால் நல்ல வரம் பெற்றிருக்க வேண்டும். நல்ல தாயார், தந்தையார் வாய்க்க வேண்டுமானாலும் நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் வாய்க்க வேண்டுமானாலும் ஒவ்வொன்றிற்கும் நாம் பிறப்பதற்கு முன்பே முன் பிறவிகளில் நல்வினைகளைச் செய்து வந்திருக்க வேண்டும். அதனால் தான் ''மேலைத் தவத்தளவேயாகுமாம் தான் பெற்ற செல்வம்'' என்று ஔவைப் பிராட்டியார் கூறியிருக்கிறார். நாம் இப்பொழுது நல் வாழ்வு வாழ்கிறோம் என்றால் அது முற்பிறவிகளில் செய்த நல்வினையின் பலன் என்று உணர வேண்டும். இனிமேல் நல்வாழ்வு வாழ வேண்டுமானால் இப் பிறவியில் தீய காரியங்கள் புரியாதிருக்க வேண்டும். நாம் செய்த செயலுக்குத் தக்கபடி தான் இறைவன் நமக்கு அருள்பாலிக்க முடியும். நல்ல ஆசிரியர், மாணவன் எழுதிய விடைக்குத்தக்கபடி தான் மதிப்பெண் கொடுக்க முடியும். மாணவன் நல்ல முறையில் விடை எழுதினால் ஆசிரியர் சந்தோஷமாக நல்ல மதிப்பெண் தருவார் அல்லவா? அது போல இறைவனும் நாமெல்லாம் நல்ல காரியங்களையே செய்ய வேண்டும்; நல்ல வாழ்வே வாழவேண்டும் என்று ஒரே கருணை உள்ளத்துடன்தான் இருக்கிறார். நாம் செய்யும் காரியங்களுக்கேற்ப வாழ்வையும் வரையறை செய்து கொடுக்கிறார். நாம் நன்றாக வாழ வசதியில்லையானால் அது நாம் செய்த வினைகளால் விளைந்தனவே தவிர, இறைவனையோ அன்றி வேறு யாரையுமோ குறை கூறுவதற்கில்லை. நாம் விதைத்த விதைதானே விளைந்து பயன்தரும். எட்டிக்காயை விதைத்துவிட்டு முதல்தரமான சேலம் மாம்பழத்தைப் பெற முடியாதல்லவா? நல்ல விதை விதைத்தால் தானே நல்ல கனிகளைப் பெறலாம்.' நாம் செய்து வரும் ஒவ்வொரு காரியமும் பின் காலங்களில் நாம் அனுபவிக்கப் போகும் பலனுக்குரிய வித்தாகும். நல்ல காரியம் செய்தால் பிற மனிதரைக் கொண்டு நமக்கு ஆண்டவன் நன்மையே செய்வார். தீய வித்திட்டால் தீய பலனே கிடைக்கும். நாம் செய்யும் நல்ல காரியங்களுக்குப் பரிசும் தீய காரியங்களுக்குத் தண்டனையும் தருவதுதான் நியாயமுள்ள, பக்ஷபாதமில்லாத இறைவனது தன்மையாகும். பரிசு தருவது நம்மை ஊக்குவித்தல் பொருட்டும், தண்டனை அளித்தல் நம்மைத் திருத்துதற் பொருட்டுமாகும். அதற்கு மாறாக நல்லது செய்பவருக்குத் தண்டனையும், தீயது செய்பவருக்குப்

பரிசும் கொடுத்தால் மக்கள் எவ்வாறு திருந்த முடியும்? எனவே இறைவனோடு நேரில் பேசும் தகுதியற்ற நமக்கு இறைவனே குருநாதர் மூலமாகப் பேசும் தெய்வமாக இருந்து, நமக்கு நல்ல காரியத்தையும், தீய காரியத்தையும் மிகத் தெளிவாகக் கூறி, நாம் நல்ல காரியங்களை மேற் கொள்ளவும், தீய காரியங்களை விலக்கவும், அதனால் நாம் நல் வாழ்வு வாழவும் வழிகாட்டி வருகிறான். அவ்வளவு கருணையுடைய கடவுளை நமக்குத் துன்பம் நேர்ந்த காலத்தில் குறை கூறுவது நியாயமாகுமா? நாம் பிறருக்குத் துன்பம் செய்தால் நாம் துன்பம் அனுபவிக்க வேண்டியதாகும் என்பதை வள்ளுவர்,

"நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் நோய் செய்யார்
நோயின்மை வேண்டுபவர்"

என்று அழகாகச் சொல்லியிருக்கிறார்.

இவற்றையுணராது நாம் சில சமயங்களில் பிறர் மனம் மிகவும்நோகும்படியான சொற்களை, அவை, அவர்களுடைய மனதில் நன்றாகப் பட்டும் சுட்டும் வேதனையுறட்டும் என்றெல்லாம் கருதிப் பேசி விடுகிறோம், அது பெரிய தவறாகும். பிறர் மனம் நோவுமாறு யாராவது பேச முற்படும் பொழுது அல்லது ஒரு செயல் செய்யத் துணியும் பொழுது நான் துன்பம் அனுபவிப்பதற்காக இதைச் செய்கிறேன் என்று தனக்குள் கருதிக் கொள்ளல் வேண்டும். அப்போது பிறர்நோவ பேசவோ எதுவும் செய்யவோ மனம் இடம் தராது. இதனை வலியுறுத்தவே ''கெடுவல் யான் என்பதறிக, தன் நெஞ்சம் நடுவெரீஇ அல்ல செயின்'' என்று வள்ளுவர் அருளியிருக்கிறார். ஆகையால் சென்ற காலத்தைப் பற்றி வருந்தாமல் இனிமேலாவது நல்ல காரியமே செய்து நல் விதையே விதைத்து நல்வாழ்வாகிய நற்பலனையே பெற முயல வேண்டும். தனக்குத் துன்பம் நேர்ந்த போது, நாம் பிறருக்கு முன் துன்பம் செய்த வினையின் பயனை அனுபவிக்கிறோம்; வினை கழிகிறது என்ற திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் பொறுத்துக்கொள்ள வேண்டும். யார் மூலமாக அத் துன்பம் வந்ததோ அவர்களுக்குத் திரும்பவும் நாம் தீங்கு செய்தல் கூடாது. இதைத் தான் வள்ளுவர் ''உற்ற நோய் நோன்றல்'' என்ற திருக்குறளால் குறிப்பிடுகிறார்.



"உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

உயிர்க்கு உறுகண் செய்யாதே என்கிறார் வள்ளுவர். சிலர் மனிதர் மட்டுமே உயிருள்ளவர், மற்றைய பிராணிகள் எல்லாம் உயிரற்றவை என்று கருதுகின்றனர். மிருகங்களும் நம்மைப்போல் உண்ணுவதையும், உறங்குவதையும், ஓடுவதையும், கத்துவதையும், குட்டிகள் போடுவதையும், ஆணும் பெண்ணுமாக வாழ்வதையும், மக்கள் தங்கள் கண்களால் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தும் அவற்றைக் கடவுள் மனிதருக்காகவே படைத்திருக்கிறார் என்று ஏதேதோ போலிக் காரணங்களைக் கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். பிராணிகளுக்குச் செய்த துன்பமும் துன்பம் தான். அச் செயல் இறைவனால் பதிவாக்கப் படாமலிருக்காது. அதற்குரிய தண்டனையை அனுபவியாது தப்பித்துக் கொள்ளவும் முடியாது, நம்மை நாம் நல்வாழ்வு வாழ்வதற்குத் தகுதியாக்கிக் கொண்டால் இறைவன் நற்பயன் அளிக்கக் காத்துக்கொண்டிருக்கிறான். மனம், வாக்கு, காயங்களால், நாம் செய்யும் நல்ல காரியங்களே நம்மை அதற்குத் தகுதி உடையவர்களாக ஆக்குகின்றன. எல்லாம் நாம் நடந்து கொள்ளும் முறையில்தான் இருக்கின்றன. இறைவன் மேல் யாதொரு குற்றமும் இல்லை.

நமது முன்னோர்களெல்லாம் நாம் நற்காரியங்கள் செய்யும் முறையை அவர்கள் நடந்தும், சொல்லியும், எழுதியும் வைத்து அறிவித்திருக்கின்றனர். முதலில் தூய உள்ளம் உடையவராக இருக்க வேண்டும். அதுவே பிறருக்கு எல்லா வகையிலும் நற்காரியங்கள் செய்ய உதவியாக இருக்கும். அவ்வாறு தூயஉள்ளம் உடையவராகஇருக்கஇறைவனுடைய நாமத்தைநாம் அடிக்கடி ஓதுதல் வேண்டும். அவர் புகழைக் கூறும் பிரார்த்தனைப் பாடல்களைத் தினமும் பாட வேண்டும். அப்படிப் பாடப்பாட நமது பொய்யான உள்ளம் மெய்யான உள்ளமாக மாறும். அதனாலேயே மணிவாசகர் ''போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்'' என்று அருளியிருக்கின்றார். நாம் எவ்வளவு பிழை செய்தாலும் இறைவனிடம் சென்று செய்த பிழையைப் பொறுக்க வேண்டும் என்று பல முறையும் சொல்லி வழிபட்டால் நாம் பிழை செய்யும் போது மனச்சாக்ஷியே

நமக்கு ஒருவித உணர்ச்சியை உண்டுபண்ணி, அப் பிழையைச் செய்யாது விட்டு விடும்படி செய்யும்.

அதனால்தான் நம் சமயக் குரவர்கள் மக்கள் எவ்வளவு தீவினைகள் செய்திருந்தாலும் சரி, முறைப்படி தீக்ஷை செய்விக்கப் பெற்று இறைவனது திருநாமத்தை ஓதிக் கொண்டிருந்தால் எல்லாத் தீமைகளும் நீங்கித் திருந்தி விடலாம் என்று அருளியிருக்கிறார்கள். இதனை வலியுறுத்தவே ஞானசம்பந்தர் அருளிய நயச்சிவாயப் பதிகத்தில் ''கொல்வாரேனும் குணம் பல நன்மைகள் இல்லாரேனும் இயம்புவராயிடின் எல்லாத் தீங்கையும் நீங்குவர்'' என்றும், ''மந்தரம் அன பாவங்கள் மேவிய பந்த அனையவர் தாமும் பகர்வரேல் சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்'' என்றும் ''நரகம் ஏழ்புக நாடினராயினும் உரைசெய்வாயினர் ஆயின் உருத்திரர் விரவியே புகுவித்திடும் என்பவரால்'' என்றும், வரும் வாசகங்களே போதிய சான்றுகளாகின்றன. எவ்வளவு பெரிய பாவிகளானாலும் இறைவன் நாம ஜபத்தினால் மனம் திருந்தி நல்ல காரியங்கள் புரியவும் அதனால் நல்வாழ்வு வாழ விதை விதைக்கவும் முடியும். மேலும் மேலுலகங்களில் ஆட்சி செலுத்தும் பேறும் கூடப் பெறலாம் என்கிறார்கள். அதனால்தான் ஞானசம்பந்தர் ''வானில் அரசாள்வர் ஆணை நமதே'' என்றும், சுந்தரர் ''அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே'' என்றும் பாடியிருக்கின்றனர்.

ஆகையால் நாம் நமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதோடு, இனி வரப் போகும் காலத்தில் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற கருத்துடன் முடிந்த அளவு நல்ல காரியங்களையே செய்ய வேண்டும். நல்லனவற்றையே செய்து நம்மை நாமே தகுதியுடையவராக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதுவே நல்வாழ்வு வாழ்வதற்குரிய வழியாகும்.

---

பட்டிக் கடாவில் வருமந்த காலனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவி டேன்வெய்ய சூரனைப்போல்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மான்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசக்தி வாளென்றன் கையதுவே.

— அலங்காரம்.



# அத்தனின் அருள்

(இளங்கண்ணன்—தலைமை ஆசிரியர்
பூங்கா உயர்தர ஆரம்ப பள்ளி, உடுமலை)

— சென்ற இதழ்த் தொடர் —

உலகியல் அறிவும் ஞானமும் அளிக்கும் கல்வி கற்காத கசடராகவும், பொருளைச் செலவழித்து திருப்பணி செய்யா வறியவராகவும் நாகரிகத்திலே தோய்ந்து விளங்கா விழுப்பம் உடைய வல்லவனாகவும் விளங்கி தன் அன்பு ஒன்றே குறைவின்றி இறைவனுக்கு அளித்த திண்ணனார் தன் ஊனக் கண்ணை அத்தனுக்கு அப்பி ஞானக் கண் பெறும் அருள் வடிவானார். ஆகம வழிநின்ற சிவகோசரியார் அதை உணர்ந்து களிப்பெய்தினார். கொல்லாமையும் புறத் தூய்மையும் ஆதாரமாகக் கொண்டு இறைவனை வணங்குகின்ற நமக்கு இதனால் சில ஐயப்பாடுகள் நேரக்கூடும். நாம் எப்படி வணங்கினாலும் இறைவன் நமக்கு அருள் செய்வார் என்ற குருட்டுத்தனமான முடிவு ஏற்படக்கூடும். இவ்வையங்கள் எல்லாம் சிவகோசரியாருக்கு இருந்தது. ஆகவே இறைவன் அவர் கனவில் தோன்றி,

''அவனுடைய வடிவெலாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனியவாம் என்றும்,
அவனுடைய நிலை இவ்வாறறி நீ''

என்று கூறி மறைந்தார். இது பற்றியே சிவகோசரியார் மறைந்திருந்து கண்ணப்பர் இறைவனுக்குக் கண் அப்பும் காட்சியைக் கண்டார். இதனின்று அன்பும் ஆர்வமும் முக்கியமானது எனக் கொள்ள வேண்டுமே அல்லாது வழிபாட்டு முறை தாழ்ந்ததாக இருந்தாலும் இறைவன் அருள் செய்வான் என்ற முடிவுக்கு வரலாகாது. நம்மாழ்வார் ஒவ்வொருவருடைய வாழ்க்கை நிலைக்கேற்ப உருவாகும் அறிவு நிலையையொட்டி அவர்கள் விரும்பிய வடிவினன் ஆக அவர்களின் பூசையை ஏற்று நிறைவோடு இறைவன் அருள் புரிகின்றான் என்ற கருத்தினை அறிவித்துள்ளார். ஆகவே அவரவர் வாழ்வு நிலைக்கேற்ப உருவாகும் அறிவு வளர்ச்சிக்கேற்ற வண்ணம் ஆண்டவனை நெறிப்படி நினைத்து வருங்கால் அவன் அருள்கின்றான்.

"அவரவர் தமதம அறியறி வகைவகை
அவரவர்ரிறை யவரென வடிவடைவார்கள்
அவரவர் இறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடைய நின்றனரே''

— நம்மாழ்வார் பாசுரம்.

முற்றும் துறந்த பட்டினத்தடிகள் கண்ணப்பரைச் சிறப்பித்துப் பின்வருமாறு பாடியுள்ளார்.

''வாளால் மகவரிந்து ஊட்ட வல்லேன் அல்லேன்
மாது சொன்ன சூளால், இளமை துறக்க வல்லேன் அல்லேன்
நாளாறில் கண்ணிடந்தப்ப வல்லேன் அல்லேன்
நான் ஆளாவ தெப்படியோ காளத்தியப் பருக்கே''

சிவனுக்குத் தன்மகனை அரிந்து இட்ட சிறுத் தொண்டரையும் திருநீல கண்டரையும் ஈண்டு சிறப்பித்துள்ளது எண்ணத் தக்கது.

கல்லாத கண்ணப்பருக்கு அருளியது போன்று கற்றவர்களுக்கும் இறைவன் அருளினுன். சிறந்த சைவ வேளாண் மரபில் பிறந்த திலகவதியாரின் தம்பியாகப் பிறந்து இளமையில் பெற்றேரை இழந்து ஆன்ம அறிவு அடைய ஏற்பட்ட அவாவினுல் பிற சமயமாகிய சமணத்தில் புகுந்து தர்மசேனர் என்ற பட்டம் பெற்று இருக்கும் பொழுது சூலை நோய் பெற்று திருவீரட்டானேஸ்வரனின் கழலை அடைந்து நோய் தீரப் பெற்று, நாவினிக்கப் பாடியதால் நாவுக்கரசர் என்ற பட்டம் பெற்ற அப்பர் ஆகம வழி நின்றவர். உழவாரப்படைகொண்டுதிருத்தலங்களில் காணப்படும் புற் பூண்டுகளை நீக்கி மெழுகி இறைவனுக்குப் பூச்சூட்டிப் பாமாலை சாற்றினுர். அகத்தே அகந்தை நீக்கி அன்பைத் தேக்கினுர். தலை வணங்கிக் கையைக் கூப்பினுர். கால் கடுக்கத் திருத்தலங்களுக்குச் சென்றுர். அகமும் புறமும் தூய்மையே வடிவாகக் கொண்டதினுல் அவர் சிவனருள் பெற்றுர். இறைவன் அச்சம் அற்றவன், உண்மையில் அவன்அருளை அடைந்தவர் அஞ்சுவதற்குஒன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை. நமது இந்து சமய நூல்களில் ''அபி; அபி'' (அச்சமற்றவன்) என்ற அடைமொழி இறைவனுக்குக்கொடுக்கப்பட்டுள்ளது. இப்பண்பிற்குரியவனுகியவனின் பாதுகாப்பாகிய அருளை அடைந்த அடியாராகிய அப்பருக்கு அச்சம் என்பதில்லாத் காரணத்தினுல் கோனை மதியாமல் துரும்பாகக் கருதினுர். துறவிக்கு வேந்தன் துரும்பாகத் தோன்றியதினுல் ஏற்பட்ட களிப்பினை அநுபவித்தார். வேந்தனின் ஆட்கள் அவரை அழைத்தபோது இறைவனின் ஆளாகவே மாறிவிட்டதினுல் தனக்கேற்பட்ட களிப்பிலே நெஞ்சில் அச்சமின்றி

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியில்லாத் தன்மையான சங்கரனற்
சங்க வெண்குழையோர் காதிற் கோமாற்கே
நாமென்று மீளா ஆளாய் கொய்மலர்ச் சேவடியிணையே
குறுகினேமே''

எனப் பாடினுர்.

சமணர்களின் கோளுரைகளைக் கேட்ட மன்னன் நீற்றறையிலிட்டும், நஞ்சுண்ணச் செய்தும் களிற்றினுல் இடரச் செய்தும் இறவாமையினுல் அப்பரை பாறையோடு பிணித்துக் கடலில் எறிந்து விடுமாறு கூறிய போதிலும் அவனை எதிர்த்துப் போராடப் போர்க் கருவிகளைத் தேடாமல், சினமோ அச்சமோ பழிக்குப்பழி வாங்கும் உணர்வோ இன்றி, நமனை உதைத்த திருவடியை நினைந்து நமச்சிவாயப் பதிகத்தைப் பாடினுர். அப்பாட்டிலே இறைவனின் மாட்சியையும் அவன் அருளின் மாண்பையும் சொல்லோவியமாகக் காட்டுகிறுர் அப்பர் சுவாமிகள்.

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே''

"மாப்பிணைத் தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணைத் தழுவிய நமச்சிவாய பத்தும்
ஏத்தவல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே''

என்று பாடினுர்.

- தொடரும்.

'ATHMAJOTHI' Registered at the G.P.O. as a Newspaper. M.L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

17 ஆவது ஆண்டு 2 வது சோதி இன்று உங்கள் கையில் கிடைக்கின்றது. சந்தா நேயர்களின் உதவியினாலேயே சோதி பதினாறு ஆண்டுகளைக் கடந்துள்ளது. சோதிக் குழந்தை உங்கள் வீட்டைத் தேடிவரும்போது என்ன பரிசு அளிக்க போகின்றீர்கள். உங்கள் சந்தாவை உடனே அனுப்பி வைத்தல்தான் கள் கொடுக்கும் பரிசாகும். என்றென்றும் உங்கள் ஆதரவு கிடைப்பதா

இந்தியாவிலுள்ள சந்தாநேயர்கள் தமது சந்தாவை வழக்கம்போல்

R. வீரசம்பு, சம்பு இண்டஸ்ரீஸ்,
அரிசிப்பாளையம், சேலம்—9.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைப்பதோடு இவ்விடமும் அறியத் தருவீர்களாக.

## ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி. (சிலோன்)

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| 1. | ஆத்மஜோதி மலர் (1963) | 2.00 |
| 2. | சைவஇலக்கியக் கதா மஞ்சரி | 3.00 |
| 3. | ஆத்மநாதம் | 3.00 |
| 4. | தீங்கனிச் சோலை | 2.50 |
| 5. | பாட்டாளிபாட்டு | 1.50 |
| 6. | திவ்ய ஜீவன சங்க வெள்ளி விழா மலர் | 1.25 |
| 7. | கூட்டு வழிபாடு | .30 |
| 8. | நவராத்திரிப் பாடல் | .30 |
| 9. | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 10. | கதிர்காமப் பதிகம் | .25 |
| 11. | செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| 12. | கந்தரனுபூதி | .25 |
| 13. | அறிவுரைக் கதைகள் | .65 |
| 14. | நித்திய கருமவிதி | .25 |
| 15. | கதிரைமணிமாலை | .50 |

தபாற் செலவு தனி

அச்சிடுவோர்:- ஆத்மஜோதி அச்சகத்தினர்
அச்சிடுவிப்போர்:- ஆத்மஜோதி நிலையத்தினர்
வெளியிட்டதேதி:- 15-11-64.